பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 06 2025 7 15

திங்கட்கிழமை காலை

## தலைப்புச் செய்திகள்

1. ஆபரேஷன் சிந்தூர் வெற்றி தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை உலக நாடுகளுக்கு உணர்த்தி இருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

2. ஜம்மு-கஷ்மீர் விவசாயிகள் லாபம் தரும் நறுமணப் பொருள் சாகுபடியை மேற்கொள்ளுமாறு மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. பாராகுவே அதிபர் திரு. **Santiago Pena Palacios** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

4. காஸா பகுதியில் உள்ள நிவாரண மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாலஸ்தீனர்கள் 30 பேர் உயிரிழந்தனர்.

5. **Ulaan Baatar** ஓபன் மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் உதித் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

*--- இனி விரிவான செய்திகள் ---*

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையில் ராணுவத்தின் வெற்றி தீவிரவாதத்திற்கு எதிரான இந்தியாவின் நிலைப்பாட்டை உலக நாடுகளுக்கு எடுத்துரைத்திருப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் கூறியுள்ளார்.

ஆக்ராவில் லோக்மாதா அஹில்யா பாய் ஹோல்கரின் 300வது பிறந்தநாள் விழாவில் பங்கேற்றுப் பேசிய அவர், அஹில்யா பாயின் வாழ்க்கை ஒரு வரலாறு என்பதோடு, இந்தியர்கள் அனைவருக்கும் வழிகாட்டும் தத்துவமாக திகழ்கிறது என்றார்.

அவரது போதனைகள் மற்றும் நற்பண்புகளை நாட்டு மக்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும் எனவும் திரு. ஜக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டார்.

<<<<>>>>

நாட்டின் பொருளாதாரத்தில் வேளாண் உற்பத்தி முக்கியப் பங்கு வகிப்பதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் கருத்தரங்கு ஒன்றில் பேசிய அவர், கிராமப்புறங்களில் வறுமை பெருமளவு குறைந்து வருவதுடன், மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக கூறினார்.

'லட்சாதிபதி சகோதரி' திட்டம், பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதற்கான பெரும் இயக்கமாக உருவெடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நெல் ரகங்கள், 30 சதவீதம் அதிக விளைச்சல் தரக்கூடியவை என்பதோடு, வழக்கமாக தேவைப்படும் தண்ணீரைவிட 20 சதவீதம் குறைவான தண்ணீரே போதுமானது என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் இந்த நெல் ரகங்கள், வழக்கத்தைவிட 20 நாட்களுக்கு முன்பாகவே விளைச்சல் தரக்கூடியவை என்றும் சுட்டிக்காட்டிய திரு. சிவராஜ் சிங் சௌஹான், கலாச்சார பாரம்பரியம் மற்றும் நவீனமயத்துடன் நாடு முன்னேறிச் செல்வதாகவும் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீர் விவசாயிகள் லாபம் தரும் நறுமணப் பொருள் சாகுபடியை மேற்கொள்ளுமாறு மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஜம்மு-கஷ்மீரின் தோடா மாவட்டத்திற்கு உட்பட்ட பதேர்வா-வில் 3வது லாவண்டர் திருவிழாவை தொடங்கி வைத்து அவர் பேசினார்.

இந்தத் திருவிழாவை ஒட்டி நடைபெறும் கண்காட்சியைப் பார்வையிட்ட அமைச்சர், பதேர்வா பகுதியை நறுமணப் பொருள் சாகுபடி மையமாக மாற்றியதில் விவசாயிகள் மற்றும் தொழில்முனைவோரின் பங்களிப்பை வெகுவாகப் பாராட்டினார்.

வாசனை திரவியம் தயாரிக்கப் பயன்படும் லாவண்டர் மலர் சாகுபடியை ஊக்குவிக்கும் வகையில் மத்திய அறிவியல் தொழிலக ஆராய்ச்சி நிறுவனமும், ஜம்மு ஐ.ஐ.எம். நிறுவனமும் இணைந்து இந்தத் திருவிழாவிற்கு ஏற்பாடு செய்துள்ளன.

<<<<>>>>

பாராகுவே அதிபர் திரு. **Santiago Pena Palacios** மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

அவருடன் அமைச்சர்கள் மற்றும் தொழில்துறையினர் அடங்கிய உயர்மட்ட குழுவினரும் இந்தியா வருகின்றனர்.

இந்தப் பயணத்தின்போது பராகுவே அதிபர், பிரதமர் திரு. நரேந்திர மோடியுடன் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாக வெளியுறவு அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் உள்ளிட்டோரையும் அவர் சந்தித்துப் பேச உள்ளார்.

நாளை மறுதினம் மும்பையில் நடைபெறும் நிகழ்ச்சியிலும் தொழில் துறையினரை பராகுவே அதிபர் சந்திக்க உள்ளதாக அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

காஸா பகுதியில் உள்ள ரஃபாவில் போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மனிதநேய உதவி மையத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பாலஸ்தீனர்கள் 30 பேர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து தற்செயலானது அல்ல என்றும், அப்பாவி மக்களைத் தாக்குவதற்கான இஸ்ரேலின் புதிய தந்திரம் என்றும் ஹமாஸ் அமைப்பு குற்றம் சாட்டியுள்ளது.

ஆனால் ஹமாஸ் அமைப்பின் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள இஸ்ரேல் ராணுவம், ஊடகங்களுடன் இணைந்து அந்த அமைப்பு தவறான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இனி . . .

ஆபரேஷன் சிந்தூரின் வெற்றியைக் கொண்டாடும் வகையில், சாதனை படைத்த பாதுகாப்புப் படையினரின் சிறப்பைப் போற்றும் வகையிலான செய்தித் தொகுப்பு...

**(Sound Byte – Music – 12 Sec)**

இதில் இன்று இடம்பெறுகிறது பரம்வீர் சக்ரா விருது பெற்ற லான்ஸ் நாயக் கரம் சிங் குறித்த வீரதீர சாதனைகள்...

**(Voice Over / Closing Music – 130 Sec)**

<<<<>>>>

நாட்டின் சரக்கு மற்றும் சேவை வரி வருவாய் கடந்த மே மாதத்தில் 2 லட்சத்து ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரித்துள்ளதாக மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தைவிட 16 புள்ளி 4 சதவீதம் அதிகம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கடந்த ஏப்ரல் மாதத்தில் இதுவரை இல்லாத அளவாக 2 லட்சத்து 37 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு ஜி.எஸ்டி. வரி வசூலாகி இருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்தூர் போன்ற நடவடிக்கைகளில் தொடர்ந்து வெற்றி பெறுவதற்கு பொறியியல் துறையில் நாடு சிறந்து விளங்குவது அவசியம் என்று சென்னை ஐ.ஐ.டி. இயக்குநர் திரு. காமகோடி கூறியுள்ளார்.

காஞ்சிபுரத்தில் தனியார் கல்லூரி ஒத்துழைப்புடன், சென்னை ஐ.ஐ.டி.-யில் நடத்தப்படும் பாடப் பிரிவுகள் மற்றும் பொறியியல் தொழில்நுட்ப வாய்ப்புகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

**(Voice Byte – Kamakoti – 45 Sec)**

<<<<>>>>

**Ulaan Baatar** ஓபன் மல்யுத்தப் போட்டியில் இந்தியாவின் உதித் வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவர் 61 கிலோ எடைப்பிரிவில் அவர் இப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

--------------

நார்வேயில் நடைபெற்று வரும் சர்வதேச செஸ் போட்டியில் இந்தியாவின் கொனேரு ஹம்பி தொடர்ந்து முதல் இடத்தில் நீடிக்கிறார்.

6வது சுற்று முடிவில் அவர் 9 புள்ளி 5 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

குகேஷ் 6வது சுற்றில் நார்வேயின் மேக்னஸ் கார்ல்சனை வென்றார்.

6வது சுற்று முடிவில் அவர் 8 புள்ளி 5 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.

--------------

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பஞ்சாப் அணி இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

-------------

யுரோப்பியன் கோப்பை பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா 2 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களை வென்றது.

ரோமில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் குழு மற்றும் கலப்புக் குழு பிரிவுகளில் 2 வெள்ளிப் பதக்கங்களையும், மகளிர் குழு பிரிவுகளில் 2 வெண்கலப் பதக்கங்களையும் வென்றது.

மகளிர் பிரிவில் பூஜா வெண்கலப் பதக்கம் வென்றார்.

-------------

பிரிட்டிஷ் ஓபன் ஸ்குவாஷ் போட்டியின் இந்தியாவின் **Anahat Singh** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 11-3, 6-11, 11-8, 11-3 என்ற செட் கணக்கில் ஸ்காட்லாந்தின் **Lisa Aitken**–ஐ வென்றார்.

**<<<<The end>>>>**